## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | CC 41/2020 |
| Deposition of witness | : | PW-4 |
| Name | : | பெரியசாமி |
| Father Name | : | நாச்சிமுத்து கவுண்டர் |
| Age | : | 61 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11.03.2026.

**முதல் விசாரணை**

1. நான் ஊத்துக்குளி ஆர்.எஸ்-ல் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 14.09.2018 ஆம் தேதி காலை சுமார் 7 மணி அளவில் நான் இரட்டைக்கிணறு சென்று விட்டு காங்கேயம் ரோட்டில் மேற்கே நோக்கி எனது ஸ்கூட்டி வாகனத்தில் வந்து கொண்டு இருந்தேன். அப்போது எனக்கு தெரிந்த கோகுல கண்ணன் என்னை தாண்டி அவரது கருப்பு நிற பல்சர் வாகனத்தில் சென்றார்.

2. அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த லாரி வேகமாக வந்து பைக்கின் மீது மோதி விட்டது. நான் உடனே எனது வண்டியை நிறுத்திவிட்டு உடன் வந்த முத்துநாயக்கரும் ஓடி சென்று பார்த்தபோது கோகுல கண்ணனின் நெஞ்சு தலைப்பகுதியில் பலத்த அடி இருந்தது. நான் போன் செய்து வேலுமணிக்கு தகவல் சொன்னேன். அவர் உடனே வந்து பார்த்துவிட்டு கொங்கு ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார். பின்னர் அவர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டு, சவக்கிடங்கிற்கு சென்று பார்த்தேன். அப்போது ஊத்துக்குளி போலீசார்

அங்கு வந்து என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள். விபத்தின் போது சம்பந்தப்பட்ட லாரியை ஓட்டிவந்த நபரை நான் பதற்றத்தின் காரணமாக பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரியின் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.11 15:02:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.